சிவபூமி என்று திருமூலப்பெருமானால் சிறப்பிக்கப்பட்ட தெய்வபூமி. தெய்வாலயங்களும் தெய்வாலயங்களின் அருளின் மாட்சியும். பௌத்த விகாரைகளின் அற்புதக் கலையமுதும், கிறிஸ்தவ தேவாலயங்களின் புனிதச்சிறப்பும் இஸ்லாமிய பள்ளிவாசல்களின் பாங்கு ஓசையும் இந்த இலங்கை மாதாவின் இதயத்தையே புனிதப்படுத்தி வைத்திருக்கிறது.

ஆம் இலங்கை ஒரு புனிதபூமி பாரதநாட்டிலே நேபாளத்துத் திருமண்ணிலே கபிலவஸ்து லும்பினி கிராமத்தில் அவதாரம் செய்த தெய்வமகன் தர்மத்தின் வடிவம், சாந்த மூர்த்தி, கௌதம புத்தபகவான் இந்தப்பூமியில் மூன்று தடவைதன் திருவடியினை பதித்ததாக வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன. அதே போல் கடையிற்சுவாமி, செல்லப்பா சுவாமி, யோகர் சுவாமி, செல்லாட்சி அம்மையார், செல்லப்பா சுவாமி, குழந்தைவேல் சுவாமிகள், வடிவேல் சுவாமிகள் போன்ற மகான்களையும் பெரியானைக்குட்டி சுவாமி, நவநாதசித்தர், சித்தானைக்குட்டி சுவாமி போன்ற சித்த புருஷர்களையம் இந்நாடு கண்டுள்ளது. அறிவுசால் பெருமக்கள், பல்துறை சார்ந்த அறிஞர்கள் இவர்கள் எல்லா இனத்திலும் பிறந்து இந்த இலங்கை மாதாவின் தவப்புதல்வர்களாக மிளிர்ந்து ஒளிதந்து இருக்கிறார்கள். இத்தகைய பழமையும் பெருமையும் கொண்ட இந்த இலங்கை மண்ணின் சிறப்புகள் நெஞ்சை விட்டு அகவாதவை.

வானுயர்த்த மலைகள் வளைந்து நெளிந்து ஓடும் பெருநதிகள் இலங்கை அன்னைக்கு சிற்றாடை கட்டியது போல் மகாவலிநதி அழகார்ந்த கடற்கரை வெண்மனல் பரப்புகள் மரகத பச்சை அழகு மிளிர்கின்ற குளிரிச்சி மிகு சோலைகள், விலை பொருந்திய பெறுமதி மிக்க திரவியங்களான மாணிக்கம், ரத்தினம் போன்ற உயிரினைய பொருட்கள் மேலை நாட்டவரையும் ஈர்த்துக் கொள்ள இலங்கையின் இனிமை இவ்விலங்கை உண்மையாகவே ஒரு சிவபூமி, இனியபூமி இந்த இனிய பூமியின் ஓர் இனிய பகுதிதான் வடமேல் மாகாணம் விளங்குகின்ற இலங்கைக்குள் துலங்குகின்ற இலங்கையாக இலங்கையின் மறுபக்கமான ஒரு பகுதியே இவ்வடமேல்மாகாணம் வடதிசையின் வடக்கும், மேற்கும் வளம் காட்ட அதன் நடுவமைந்த உயர்ந்த மலைசார் பூமியே வடமேல்மாகாணம். மாநகரமே நாம்.

## வடமேல் மாகாணத்தின் வளமார்ந்த சிறப்பு

இந்த வடமேல் மாகாணத்தில் மிக சிறப்பு மிக்க இரண்டு மாவட்டங்கள் இரு கண்களாக மிளிர்கின்றன. அதில் குருநாகல் மாவட்டம், புத்தளம் மாவட்டம் எனும் இரண்டு மாவட்டங்கள். இதில் குருநாகல் மாவட்டம் பல சிறப்புக்களை தன்னகத்தே கொண்டுள்ளது. அச்சிறப்புகளுக்கு எல்லாம் மகுடம் வைத்தால் போல் அமைவது வடகிழக்கு மாகாணங்களின் பிரதான தோரணவாயிலாக அமைந்து எல்லா நகரங்களுக்கும் செல்கின்ற துணைவாயிலாக தனித்துவம் மிக்க நகர் சார்ந்த பண்போடு மிளர்கிறது. இக்குருநாகல் குணபாலாகிய மேற்குப் புறத்தே இலங்கையின் பஞ்சஈஸ்வரங்களில் ஒன்றான முன்னேஸ்வரம் முன்னேநிற்க அந்த முன்னேஸ்வரத்தினுடைய திருவருள் பொலிவிலே புத்தளம் மாவட்டம் பல சிறப்புகளை தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது அந்த விளக்கங்களுக்கு விளக்கு வைத்தாற் போல் விளங்குகின்ற மாநகரமே நாம் முன்னே கண்ட குருநாகல் வைரம் மிக்க பெருமலைகள் கற்றரைகளாக உறுதிசெய்ய சிறு கற்கள் இல்லாத பெரும் கற்களாலான பூமி போன்று கற்பாறைகளை உறுதியாக்கிய ஒரு தனிநகரம் இந்நகரம் இந்நகரத்தின் மத்தியில் அத்திவடிவில் ஒரு பெருமலை.

"அத்தி யென்றால் யானையல்லவோ அந்த யானையின் வடிவிலே வானெழுந்த மலை ஒரு யானை தனது நான்கு கால்களையும் நிலத்தில் ஊன்றி குனிந்து கதிர்காமக் கந்தனைச் சுமக்கின்ற பாணியில் அந்த மலையினுடைய அழகு"

அந்த அழகின் வனப்பிலே குருநாகல் நங்கை தானொரு ஷதலாதேவியாக காட்சியளிக்கிறாள். மலையிலே ஊறும் ஈரக்கசிவுகளில் இருந்து நிலப்பயிர்கள் மலைப்பயிர்களாக எழுந்து நிற்கின்றன. அந்த எழுச்சியில் அயர்ச்சி இல்லாத உயர்ச்சி தெரிகின்றது. அம்மலைகளை ஏற்றி நிற்கின்ற தென்னை மரங்கள் அந்தக் தெங்கின் இளநீர் சுவைபோல் இங்கு வாழுகின்ற மக்களுடைய அன்பின் உணர்வுகளை நன்றி கலந்த இதயப்பண்புகளை உணர்த்துகின்றன.

ஆம் இப்பூமி ஒரு பெரும் வரலாற்றை தன்னகத்தே கொண்ட பூமி இதற்கு முன்னமே பழமைசார்ந்த பெயர்கள் மக்கள் மனதில் நிலை கொண்டுள்ளன. அவை எதுகல்புர ஹஸ்திஷைலபுர என்னும் வடமொழியும் , பாளி மொழியும் கலந்த மன்னராட்சிகால இனிமைப் பெயர் களோடு இன்றும் விளங்குகின்றது குருநாகல் எனும் பெயர் பழமையான பெயர்களுக்கு

பின்நோக்கி வந்தாலும் அதன் பொருள் சிறுகற்கள் இல்லாத பெருள்கள் நிறைந்த நிலப்பரப்பு என்பதே ஆகும். இப்பரப்பின் பரந்த வரலாறு நினைக்கத் தக்கது நெஞ்சில் இருக்கத்தக்கது. ராஜதரனி எனப்படும் ஆட்சிப் பலத்திலே தன்னாட்சி கண்டபூமி. அனுராதபுர, பொலன்னறுவை எனும் பிந்திய ராஜதானியிலிருந்து இந்தக் குருநாகல் ராஜதானியில் செங்கோலாட்சி தொடங்கியது (1287ம் ஆண்டு) 2ம் புவனேகபாகு எனும் புவனமே மதிக்கத்தக்க பல புலவர்களால் போற்றுதல் மிகுந்த அந்த மன்னன் நல்லாட்சி காண்கிறான. அங்கே இந்து பௌத்த சமூகத்தின் மேன்மையும், சமயங்களின் உயர்வும் வணக்கஸ்தலங்களின் பெருமையும் அவன் ஆட்சியின் மாட்சியில் எழுச்சி பெற்றது. இந்நகரத்தின் வரலாற்றுக் சிறப்பிற்கு கலங்கரை விளக்கங்களாக தம்பதெனிய ராஜதானி, பண்டுவஸ்நுவர ராஜதானி, யாபஹுவ ராஜதானி ஆகிய பெரும் ராஜதானிகளையும் பழம் பெரும் பௌத்த விகாரைகளான எத்கந்த ரஜமஹாவிஹார, ரிதிவிஹார, மகுலான ஆகிய பெருமை பொருத்திய புத்த கோயில்களை தன்னகத்தே கொண்ட மாநகரமாக இம்மாவட்டம் விளங்குகின்ளது. அத்துடன் சைவ சமயத்தின் மாண்பும், மனதுயர் பண்பும் ஆலயங்களாக விளங்குகின்றன. அதில் குருநாகல் நகரத்தின் கிழக்குப் புறம் சார்ந்த நாட்டுக் கோட்டை நகரத்தாரின் வழிபாட்டு தெய்வமான வேலேந்தி நின்றாடும் வேலவனாம் கதிரேசனுக்கு ஒரு கோயிலை அமைத்தனர் இவ்வாலயத்தினுடைய அற்புதங்களும், பழமையும் அளவிடத்தக்கதன்று தற்போது இவ்வாலயம் புதிய ஆலயமாக கலைமிளிர் பொற்கோயிலாக மாற்றம் பெறுகிறது. அடுத்து வேலவனின் அண்ணன் வேழவன் வித்தாரமாக குடியிருக்கும் சக்தி மிக்க ஆலயம் அதன் அருகே சின்னஞ்சிறிய குளம் சிறு குடியிருப்புகள் ஆல்போல் தழைக்கட்டும் என்று வாழ்த்துவது போல் ஆலமரம். அதிலே அழகான தலம் அங்கு வீற்றிருக்கும் விநாயகன் இதற்கு மத்தியிலே இரு மகன்களையும் தன்னிரு மடியில் அமர்த்திய பாங்கிலே தாயாம் மகாசக்தியாகிய முப்புரநாயகி. ஆம் பெயரல்லவா ? முப்புரங்களை எரித்தவன் இவன் என்றே உலகம் சொல்லும் ஆனால் அந்த அரனுடல் பாதியாகி நின்றவள் இவளல்லவா? அதனால் தானோ.

""பொருந்திய முப்புரை செப்புரை
செய்யும் புனர் முலையாள் என்று""

அபிராமிபட்டர் அழகாகக் கூறுகிறார் அந்த அழகிலே எத்தனை அர்த்தம். ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்கள் அல்லவா

மும்புரங்கள் அந்த முப்புரங்களை எரித்த அந்த அன்னைக்கு முப்புரை என்ற பெயரிட்டு தனிக்கோயிலாக அமைத்து வழிபடும் தன்னடியார் சூழ்ந்து வரம் சுரக்கும் அன்னை முத்துமாரி அம்பாளுக்கு ஒரு தனிப்பாகம் இத்தெய்வாலயங்களின் பொலிவில் வித்தியாலயத்தின் சிறப்பு கு ∴ இந்து தமிழ் வித்தியாலயம் எனும் ஒரே ஒரு தமிழ் மணக்கும் கல்வி நிலையம் கவினார்ந்து காட்சி தருகின்றது.

இத்தகைய எழிலும் பொழிலும் நிறைந்த இந்நகரத்திலிருந்து கண்டி மாநகரின் பிரதான பாதை ஊடாக கடந்து வருகின்ற போது வழிநெடுகிலும் செந்நெல் களனிகள் பொன்நெல்லாக விளைகின்ற வயல்சார்ந்த நிலங்கள் அங்கே வெள்ளைக் கொக்கினமும், பசுமாடுகளும் அருமைமிக்க எருமைமாடுகளும் மேய்ந்து உறங்கும் அடல்பசும்புற்தரைகளாக காட்சியளிக்கும் நிலப்பரப்புகள் நீண்டு நெளிந்து வருகின்ர மலைத் தொடர்கள் வானமே மேகமாய் இறங்கி மலையின் உச்சியை முத்தமிடும் காட்சி அந்த நெடுந்தொடர் வீதியில்* காட்சி தரும் அழகான ஊர்கள் அந்த ஊர்களிலே முதலாவதாக தெலியாகொன்ன இஸ்லாமிய பெரு மக்கள் நிறைந்து வாழும் பெருங்கிராமம் அதைத் தொடர்ந்து மல்லவபிடியவில் வெள்ளிப் பன்சலை என வியக்க வைக்கும் ரிதீவிஹாரையின் நுழைவாயில் அந்த நூழை வாயிலின் முகப்பிலே புத்தபகவானின் திருஉருவம் உன்னத பண்பு அதைக் கடந்து பிலிகடை எனும் பழமைபொருத்திய லக்ஷ்மி தோட்டம் எனும் அழகிய கிராமம் அங்கே ஆரம்பகாலங்களில் பால், தயிர் நிறைவாகப் பெருகி ஓடின லக்ஷ்மி கடாட்சம் அந்த மண்ணிலே தன்னாட்சி கண்டது தமிழர் தம் பெருமைக்குச் சான்றாக இருந்தது காலமாற்றத்தால் தற்காலம் மாற்றமடைந்தது. அதை தொடர்ந்து நாம் காணப்போகும் நம் தாய்க் கிராமம் இதன் பெயரே பெரும் பெயர் மாத்தளை மாவத்தகம எனும் மா எனும் சொல்லில் இருந்து பெரிது படுத்திய ஒரு நகரம் இந்த மாவத்தகம நகரம் சிறிய நகரம் என்றாலும் தன்னிகர் இல்லாத பெருநகரம் மாவத என்றால் பெரும் பாதையை குறிப்பிடும் சொல் நீண்டதொருவீதி அதிலமைந்த அழகிய மாநகரம் பல் தெருக்கள் பயனுற அமைந்த நகரம் இத்தாய்நகரத்தின் சூழலிலே சேய்க்கிராமங்களாக டேசிவலி, முவன்கந்த, பிட்யகந்த, மொரத்தன்னை, நொட்டிங்ஹில், ரேந்தகொட, வரகாவெஹர, முவன்தெனிய ஆகிய சேய்க்கிராமங்களான பொற்கிராமங்களை நன்மக்களால் கொண்ட தாய்நகரமே மாவத்தகம நகரின் சிறப்பிற்கு அணிசெய்யும் நகரத்தின் தனியழகு மனதை ஈர்க்கும் அங்கே சிங்களமும், செந்தமிழும் தன்னாட்சி செய்யும் இருமக்களின் நாவிலும் இரு மொழியும் வந்து விளையாடும். அது அன்பைத்தந்து உறவாடும் பல வகையான பொருட்களை பெறும் கடைகள் ஞாயிற்றுக்கிழமைகளில் மாபெரும் சந்தை நகரம் சார்ந்த பௌத்த விகாரை இதற்கெல்லாம் மேலாக அணிக்கு

அணிசெய்வது போல் கிறிஸ்தவ பெருமக்களின் கீர்த்தியை விளக்கும் கல்வாரி அங்கு யேசுபிரானின் திருப்பாடுகள் கண்ணீரை வரவழைக்கும் அவர்களின் துன்பங்களின் தொடர்சிற்பங்கள் சிற்பங்களின் அற்புதங்களின் வடிவமைப்பு நிறைந்த கல்வாரி ஒரு அற்புத வாரியாக காட்சியளிக்கின்றது.

அந்தக் காட்சியைக் கண்டு திரும்பும் போது இன்னோர் மாட்சியாக அன்னை முத்துமாரியின் ஆட்சி மிகுந்ததலம் இத்தலம் மாவத்தகம பிரதான பாதையிலிருந்து இடது பக்கமாக கிழக்கை நோக்கிய தலமாக (பரந்தனை வீதி) காட்சியளிக்கும் இத்தலத்திலே அருள் புரியும் முத்துமாரி 200 வருடங்கள் பழமை வாய்ந்தவள் ஆரம்ப காலங்களில் அழகிய முத்துரதத்திலே அன்னை வீதி எங்கும் பவனிவந்ததாக இன்றும் மக்கள் அந்நிகழ்வினை பக்திபூர்வமாகக் கூறுகின்றனர் அந்த அன்னையிடம் வந்து பிணிதீர்க்கும் அடியார்கள் பலநூறு பேர் சாதி சமயங்களைக் கடந்து தன்னருள் மழையால் அனைவரையும் குளிரச் செய்கிறாள் இத்தகைய திருவுளமும், அருள்வளமுடைய நிறைந்த நகராம் மாவத்தகம நன்நகரைக் கடந்து வரும் பிரதான நகரத்திலிருந்து 300 m ன தூரத்தில் டைனவர் முச்சந்தி என அழைக்கப்படும் பிரதான சந்தியின் கிழக்குத் திசையாக - வழிப்பாதை அதன் இருமருங்கிலும் அரசு முதல்ட்டுச் சபையின் நிலயங்கள் அந்திலையங்களின் ஊடாக 1km தூரத்திலுள்ள சின்னத்தோட்டம் என்று முன்னோர்களால் அழைக்கப்பட்ட டெனவர் எனும் இத்தோட்டம் மிக சிறப்புற்ற தோட்டமாக விளங்கியது 363 ஏக்கர் சுற்றளவு நிலப்பரப்பைக் கொண்ட இநத டெனவர் எனும் சின்னத்தோட்டத்திற்கு ஹிலாரிடி பெர்ணான்டோ என்பவரே உரிமையுடையவராக இருந்தார் அக்காலத்தில் இங்கே 49 குடும்பங்களும் அக்குடும்பங்களில் 120 அங்கத்தவர்களுமாக வசித்து வந்தார்கள் இந்த டெனவர் எஸ்டேட் எனும் இந்த இடத்தில் முதலாலித்து காலணி ஆட்சியின் எழுச்கியிருந்தது அந்த எழுச்சிக்குரிய ஆங்கிலேய நாட்டவர்கள் இமீமண்ணை வளம் படுத்துவதற்காக பெரும் தோட்டம் பயிர்களான றப்பர், தென்னை ஆகிய பெரும் பயிர்களையும் வாழை, பாக்கு, சோயா அவரை, மரவள்ளிக்கிழங்கு, சோளன் அன்னாசி ஆகிய சிறு பயிர்களையும் வளர்த்து தன்னிறைவு கண்டனர். அத்துடன் கால்நடை வளர்ப்பதிலும் கவனம் செலுத்தினர். இந்த டெனவர் எஸ்டேட்டில் தொடப்புடையதாகிய ஹாம்பொல, தோராதொல்ல ஆகிய தோட்டங்களில் ஆங்கிலேய அதிகாரி "சிரோ என்பவரின் முகாமைத்வத்தின் கிழ் வழிநடத்தப்பட்டன. அந்தப் பழம் குடிலிலே அன்னை முத்துமாரியை இருத்தி அத்தோட்டத்திலே வாழ்ந்த தனித்தமிழ் சைவநெஞ்சங்கள் கொஞ்சப் பேராகினும் நெஞ்சம் நிறைய வழிபாடு செய்தார்கள். மண்ணினாலான அச்சிறு கோயில் கிடுகுகளினால் வேயப்பட்டிருந்தது உள்ளே சாணத்தினால் மெழுகி பசுமையாகக் காட்சியளித்தது. அந்தக்காலங்களில் இருள் சூழ்ந்த இடமாக இருந்தாலும் ஒரு அருள் சூழ்ந்த இடமாக இருந்தது. கதிர்பெருக்கத்தைக் கூட தன்பால்

ஈர்த்துக்கொள்ளாத நிழல்சார்ந்த பூமியாக அந்த டெனவர் பதி விளங்குகின்றது. அந்தப்பதியிலே கிழக்கு நோக்கி நெளிந்து வளைந்தோடும் அழகிய சிற்றாறு தென்னை மரங்களின் குளிர்ச்சியின் நடுவில் அன்னை மகமாரியான் அந்தசகலபுவனநாயகி தன்னாட்சி செய்ய திருவுளம் கொண்டவள் ஒரு திரு இடத்தை தனக்குள்ளாக்கிக் கொண்ட மகாசக்தி 1936ம் ஆண்டு 10ம் மாதம் முதலாம் திகதி ஒரு சிறிய ஆலயத்துள் அன்னை அமர்தப் படுகிறாள். பாரத பூமியின் தன்னார் தமிழகத்தை பிறப்பிடமாகக் கொண்டவரும் அறிவுசால் பூமியாகிய யாழ்ப்பாணத் திருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட அருட்திரு சுப்ரமணியம் எனும் அன்னை அடியவர் ஒருவரால் சிறிய ஆலயமாக களிமண்ணால் இவ்வாலயம் அமைக்கப்பட்டது. மேலே கிடுகுகள் வேயப்பட்டு நிலத்துக்கு புற்றுமண்ணும், களிமண்ணும் கலந்து சாணம்பூசி பசுமையாக காட்சியளித்தது அக்காலத்தில் மரத்தினாலான ஒரு சிறிய மாரியம்மனை உருவமைத்து வழிபாடு செய்தனர். அந்த அம்மனுக்கு கோவிலை அமைத்த சுப்பிரமணியமும் அவருடைய மைத்துனர் கந்தையா அவர்களும், கருப்பையா, பழனியாண்டி என்போர்களும் அக்காலத்தில் பூசை செய்த பெருமக்களாவர்.

அதைத் தொடர்ந்து 1942 ம் ஆண்டு இவ்வாலயம் புதுப்பொலிவு பெறுகின்றது. மண்ணினாலான ஆலயம் சற்று மாற்றமடைந்து தகரங்கள் தகைமை பெறுகின்றன. அந்தக் காலத்தில் மரத்தினாலான அம்மன் மாற்றம் அடைந்து சீமெந்தினால் அழகிய சிலையொன்றினை அமைத்து வழிபட்டனர். அச்சிலையை சுப்ரமணியம் கண்க்குப் பிள்ளை என்னும் அன்பரே வடிவமைத்தவர் இவருக்கு உதவியாக பழனியாண்டி, பொன்னுசாமி, மாரிமுத்து போன்றோர் உதவியாளர்களாக இருந்து அச்சிலையின் அழகுக்கு அழகூட்டினர் பார்ப்போர் மனதை ஈர்த்து எடுக்கும் அற்புதக் கலை வண்ணம் சுதையாய் இருந்தாலும் அந்த அன்னையின் முகத்திலோர் சுகம் தெய்வீகக் கலையின் அழகு கொஞ்சும் சிலையமைப்பு, எந்நோமும் புன்னைகக்கும் பொன்னழகு புருவ விழிகளில் கருவிழிப் பார்வையின் சிதறல் உண்மையாகவே ஒரு பெண்மையின் தோற்றம் அச்சிலையின் அழகு நெஞ்சம் நிறையும் நிறை அழகு

""ஐயோ இவன் வடிவென்பதோ
அழியா அழகுடையான்""

என்று தன்னை மறந்து கம்பநாடாழ்வான் அழகை இதயத்தால் எண்ணி மகிழ்ந்தானே அதேபோல் இந்த அன்னையின் அழகு அழியா அழகு என்று சொல்லத் தோன்றுகின்றது. அச்சிலையை 28.01.2005 வரை கருவறையில் ஆதிமூலமாகவும் அதன் முன்னே கருங்கல்லிலான விக்கிரகம் சிலாவிக்கிரகமாகவும் வைத்து வழிபாடு செய்து வந்தனர் 1997 ம் ஆண்டு

நடத்த மகாடும்பாபிஷேகத்தின் பின்பே கருங்கல்லிலான சிலை வைக்கப்பட்டது. 1942 ம் ஆண்டு காலநிலை அதிபயங்கரமானது. உலகம் போர்வெறியில் தன்னையழிக்க ஆயத்தமாக இருந்த வேளை குண்டுவீச்சு விமானங்களினால் பொழியப்பட்ட குண்டுகள் நிலத்தைப் பிழந்து மனதை உறுத்திய காலம் அந்தக்காலம் உலகமகா யுத்தத்தின் தொடக்கக்காலம் இந்த டெனவர் தோட்டத்திலும் இந்திய ராணுவத்தினர் நிலை கொண்டிருந்தனர். அந்த வேளையிலும் அன்னை முத்துமாரியின் சத்திய ஆட்சி டெனவர் பூமியில் தளைத்திருந்தது. 1960 ஆம் ஆண்டு காலம் இவ்வம்பாளுக்கு ஒரு புதிய தேர் அமைத்து அன்னையை இருத்தி முதன்முதல் தேர்பவனி நடைபெற்றது. அத்தேர் குதிரையின் வடிவிலே செய்யப்பட்டது. அத்தேரை டெக்டர் வண்டியில் வைத்துக் கொண்டு சென்றனர். ஆரம்பத்தில் இத்தேர் பவனி டெனவர் தோட்டத்தின் எல்லையை மாத்திரமே சுற்றிவந்தது. அதன் பின்பு தொடந்து 3 ஆண்டுகள் இத்தேர் பவனி நடைபெற்றது அக்காலத்தில் சின்னத்தம்பி அவர்களும், பழனியாண்டி அவர்களும் பூசகர்களாக கடைமையாற்றினர். அக்காலம் ஒரு பொற்காலமாக இவ்வாலயத்திற்கு அமைந்தது. இக்காலத்தில் பல அதிசயசம்பவங்கள் இவ்வாலயத்தில் நிகழ்ந்தன.

## இருண்டகாலம்

DSP பீரிஸ் எனும் தோட்ட அதிகாரி கத்தோலிக்க மதத்தைச் சார்ந்தவர். ஒரு வெறிபிடிந்த மனித நேயமில்லாத ஒருவராக இவர் கருதப்பட்டார். இவர் இத்தோட்டத்தில் வாழ்ந்த தமிழ் மக்களுக்கு மிகப்பெரும் கொடுமைகளைச் செய்துள்ளார். ஆண், பெண் என்று பாராது அனைவரையும் அடித்துத்துன்புறுத்தி கொடுமைகள் செய்து தாங்க முடியாத துன்பங்களைச் செய்தவர் இதன் காரணமாய் இத்தோட்டத்தைச் சேர்ந்த மக்கள் இத்தோட்டத்தை விட்டு வெளியேறினர். எனவே அக்காலம் ஓர் இருண்டகாலமாக இருந்தது. இதனால் மிகப் பாதிப்படைந்த இத்தோட்ட மக்களின் நிலையைக் கருத்திற் கொண்ட தோட்ட நிருவாகம் இக் கொடுமையான தோட்ட அதிகாரி பீரிஸை மாற்றி விட்டு மெண்டிஸ் எனும் புதிய அதிகாரியை 1966ம் ஆண்டு நியமித்து அவர் ஒரு பண்பாளராகவும், பக்தியுடையவராகவும் இருந்ததன் காரணமாக ஒரு நாள் இக்கோயிலின் வழியாகச் செல்லுகின்ற போது இவ்வரிய அம்மனை கண்ணாரக் கண்டார் மனதார உருகினார் அன்னையின் பால் காதல் வயப்பட்டார்.

அந்நியவராக இருந்தும் அந்த அன்னையின் கருணை இவரை அவள் பால் ஈர்த்தது. அவள் தாயல்லவா. அந்தத் தாய்க்கு ஏது ஜாதி, மதம், குலம், இனம், மொழி இவையெல்லாம் கடந்தவள் அதனால் தான் இந்த மெண்டிஸ் என்பவரை தன் மகனாகப் பார்த்தார்.

உயர்திரு மெண்டிஸ் துரை அவர்களின் காலம் டெனவர் தோட்டத்தின் ஒரு பொற்காலம் எனக் கூறலாம். அவர் அத்தோட்ட மக்களை நன்னெறிக்குட்படுத்தப் பல வழிகளிலும் முயற்சி செய்தார். ஆலயத்திற்குச் செல்வதற்கு மக்களைத் தூண்டினார். ஆலய வளர்ச்சியில் கவனமாக இருந்தார். சிதறுபட்டுக்கிடந்த இளைஞர்களை ஒன்றுபடுத்த ஒரு புதிய உத்வேகமான சிந்தனையை உணர்த்தி அவர்களின் ஆத்மீக தாகத்திற்கு உணர்வாக இருந்தார். இவர் கௌதம புத்தபகவானின் போதனையின் படி வாழும் உண்மை பௌத்தராவர். அதன் காரணமாய் பொறுமை என்ற அணிகலன் அவர் உள்ளத்திலே நிறைந்திந்தது. இவருடன் ஆலய பூசகரான சின்னத் தம்பி அவர்களும் சேர்ந்து மென்மேலும் ஆலயம் சிறப்புற கவனம் செலுத்தியதோடு ஒரு சித்திரத் தேர் பவனியையும் செய்வதற்கு சித்தம் கொண்டனர். முதன்முதலாக 1960 ஆம் ஆண்டு இவ்வழகிய சித்திரத்தேர் பவனி நடைபெற்றது. இத்தேர் ஓர் அழகிய குதிரை வடிவத்தில் அமைக்கப் பெற்றது. இத் தேரை உழவுயந்திரம் (டெக்டர்) ஒன்றில் வைத்துக் கொண்டு சென்றனர். இவ்வழகிய தேர் டெனவர் தோட்டத்தின் எல்லையை மாத்திரமே சுற்றியது. தொடர்ந்து 3 வருடங்கள் இத்தேர் பவனி காலங்களில் சில சம்பவங்கள் நடைபெற்றமையையும் இதில் குறிப்பிட வேண்டியுள்ளது. மூன்றாம் முறையாக தேர் பவனி மாவத்தகம மாநகரை அண்மித்த போது எதிர்பாராத ஒரு தடை ஏற்பட்டது. பெரும்பான்மை இனத்தவர்களின் ஒரு சில வெறிபிடித்தவர்கள் முன்சென்றவர்களில் சிலரை அடித்துத் துன்புறுத்துகையில் தேரை வழிநடத்திச் சென்ற பூசகர் அவர்கள் தேசிக்கனி ஒன்றை ஜெபம் பண்ணி முன்பார்த்தபடி பின்னோக்கி வீசினார். அவ்வெலுமிச்சம் பழம் அம்பாளின் கையில் உள்ள சூலாயுதத்தில் தங்கியது. தேர் அப்படியே ஆலயம் வந்து சேர அத்துன்புறுத்தியவர்கள் கடும் துன்பங்களுக்க உட்பட்டு குணப்படுத்த முடியாத நோயாளிகளாக மாறி அம்பாளிடம் வந்து மன்னிப்புக் கேட்டு சரணாகதி அடைந்து துன்பங்களில் இருந்து விடுபட்டனர். இவ்வாலயத்தில் எமது உடன் பிறவா சகோதரர்களாகிய பௌத்த பெரும்மக்கள் மிக ஆழமான பக்தி உடையவர்களாக அன்றும் இன்றும் இருந்துவந்திருக்கிறார்கள். பௌத்தத்திலிருந்து இந்து தர்மத்தையும் இந்து தர்மத்திலிருந்து பௌத்தத்தையும் பிரிக்க முடியாது. இரண்டும் மனிதனை தெய்வமாக்கும் கோட்பாடுடையவை அவ்வகையில் இப்பெரும்பான்மையின மக்களிடையே காலத்திற்குக் காலம் அரசியலின் உண்மைத் தத்துவத்தைப் புரிந்து கொள்ள முடியாத அரசியல் போலிகள் பல குழப்பங்களை ஏற்படுத்தி வந்திருக்கிறார்கள். இதேபோல் இந்து மக்களிடையேயும் ஒரு சில காழ்ப்புணர்ச்சி வாதிகள் இருந்து வந்திருக்கிறார்க்ள. இவர்கள் இரு பகுதியினரும் என்னதான் குழப்பத்தை ஏற்படுத்தினாலும் உண்மைத்துவம் மிக்க இந்து பௌத்த சகோதரர்கள் சருடலும், ஒருயிருமாக இன்றும் அன்றும் வாழ்ந்திருக்கிறார்கள். என்பதை நாம் மனத்திற் கொள்ள வேண்டும். இத்தகைய சம்பவங்களின் பின் 1970 ஆண்டின் பின் தேர்பவனி நடைபெறவில்லை. ஆனால் நகர்புறத்து மக்கள் ஆலய வழிபாட்டிலும், ஆலய வளர்ச்சியிலும் கவனம் செலுத்தினர். டெனவர் வாழ் அத்தோட்ட மக்களும் மாவத்தகம நகர மக்களுமாக இணைபிரியா ஓர் அன்பின் பிணைப்பில் இவ்வாலயம் உயிர்ப்புக் கொண்டது.

# ஆலயத்தில் ஏற்பட்ட முரண்பாடுகளும் முன்னேற்றங்களும்

நீண்ட பல காலங்களாக பூசகராக கடமையாற்றி வந்த சின்னத்தம்பி அவர்களின் மனத்தில் அம்பாள் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தினாள். அக் குழப்பத்திற்கான காரணம் டெனவர் பதிவாழ் மக்கள். இவ்வாலயத்தினுடைய வளர்ச்சியில் கவனம் செலுத்த வேண்டும் என்பதற்காக அம்பாள் ஒரு நாடகம் ஆடினாள். அதன்படி பூசகர் சின்னத்தம்பி அவர்கள் தன்னை விட்டால் வேறு இங்கு பூசை செய்ய ஆளிருக்காது. என்ற உணர்வில் 1985 ஆம் ஆண்டு ஆலயக்கதவை பூட்டி பூசையை நிறுத்தி விட்டு சாவியுடன் வீடு சென்றார். அதனால் அவ்வாலயம் சோபை இழந்து சோகமாகியது. அதன் தாக்கத்தை உணர்ந்த சின்னத்தம்பி அவர்களுடைய அன்புத் துணைவி பாக்கியம் அவர்கள் இவ்வாலயத்தின் துர்ப்பாக்கிய நிலையைப் போக்க பாக்கியமே பாக்கியமானார். அதன்படி டெனவர் தோட்ட இளைஞர்களை அழைத்து பூட்டை உடைத்து பூஜை செய்யுமாறு வேண்டினார். அத் தூண்டலில் அவ்விளைய சமுதாயம் விழிப்புக் கொண்டது. நீண்டகாலம் மூடிக்கிடந்ததனால் அம்பாள் வாடிக் கிடந்தாள். குப்பைகள் கூடிக் கிடந்தன. ஊர்மக்கள் ஆடிப்போயினர். மீண்டும் ஆலயம் திறக்கப்பட்டது. புதிய மாற்றம் ஆலயத்தில் ஏற்பட்டது. இதற்கு முன்னோடியாக சின்னையா சுப்ரமணியம் அவர்களும், ஆறுமுகம் மகேஸ்வரன் அவர்களும் துடிப்பாக செயற்பட்டனர். பூசகர் சின்னத்தம்பி அவர்கள் திருக்கதவை பூட்டியதன் காரணமே ஒரு திருத்தம் ஏற்பட்டது. ஆலயத்தின் சுவர்கள் பழுதடைந்ததனாலும் ஆலயத்தின் உள்ளே கறையான் தன் வேலையை கச்சிதமாகச் செய்திருந்தது. அதனைத் தொடர்ந்து 1997 ஆம் ஆண்டு வரை மேற்படி இருவரோடு கிராம இளைஞர்களும் பெரியார்களும் சேர்ந்து இவ்வாலயத்தை முழுமையாக வழிநடத்தி வந்தனர். அக்காலங்களில் அம்பாளுக்கு தேவாரங்களைப் பாடி, பொங்கல்களைப் படைத்து நம்பியாண்டார் நம்பிகள் பூசை செய்தது போல சின்னையா சுப்ரமணியம் (சுபா) அவர்களும் ஆறுமுகம் மகேஸ்வரன் அவர்களும் பூசை செய்யும் கைங்கரியத்தை செய்து வந்தனர்.

அம்மனாலயம் புதுப்பொலிவு பெறவேண்டிய காலம் கைகூடியதால் ஆலயத்தில் ஓடுகள் களையப்பட்டு சிறியளவிலான விமானத்தூபி அமைக்கப்பட்டு 03-12-1997ம் ஆண்டு புதன் கிழமை சதுர்த்தி திதியும் பூராட நட்சத்திரமும் அமிந்தயோகமும் பொருந்திய காலை 9.30-11.45 இற்குட்பட்ட கும்பலக்கின சுபமுகுர்த்தத்தில் குடமுழுக்குப் பெருஞ்சாந்தி முதன் முதலாகக் கண்டது. அக்காலத்தில் ஆலயத்தின் புதிய தலைவராக உயர்திரு பொமன் முத்துக்குமார் அவர்கள் தலைவராக நியமிக்கப்பட்டு அக்கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து ஆலயம் பல மாற்றங்களைக் கண்டது. இக்கட்டிட வளர்ச்சிக்கும் கும்பாபிஷேகத்திற்கும் நிதி சேகரிப்பு அனைத்திலங்கை பூராவும் கிடைத்த நிதியைக் கொண்டு இப்புனித பணி நிறைவேற்றப்பட்டது. இப்புனித பணியின் தொண்டர்களாக முத்துக்குமார் சி.சுப்ரமணியம், ஆ.மகேஸ்வரன், மு.சுந்தரகுமார், திரு. மகாதேவன், திரு ராஜேந்திரன், பி. மருதே ஆகியோர் இப்பணியில் செயற்பட்டனர். அதன் பின் ஆலயம் படிப்படியாக வளர்ச்சி கண்ட வேளையில் தலைவராக இருந்து பெரும் பணியைச் செய்த திரு. முத்துக்குமார் அவர்கள் 1998 ஆம் ஆண்டு காலத்தில் தலைவர் பதவியை ராஜினாமாச் செய்து விலக சின்னையா சுப்ரமணியம் (சுபா) அவர்கள் தலைவராக தெரிவுசெய்யப்பட்டு

தன்னால் முடிந்த பணியை 2002 வரை செய்து வந்தார். அதன் பின் பாரிய மாற்றம் ஆலயத்தில் ஏற்பட அம்பாள் கருணை கூர்ந்தாள். அதன்படி அவ்வாலயம் இருந்த நிலத்தினை அரச முதலீட்டுச் சபையினர் (Board of Investment) தங்களுடைய வேலைத்திட்டங்களுக்கு எடுத்துக்கொண்டனர். எனவே அவ்வாலயத்தினை வேறோர் இடத்திற்கு மாற்றவேண்டிய நிர்ப்பந்தமும், நிர்க்கதியும் ஏற்பட்டது. அதன்படி முன்னமே ஆலயம் இருந்த பகுதியின் மேற்குப் புறமாக பால்மரங்களான றப்பர் தோட்டத்தின் ஒரு நடுப்பகுதியைத் தெரிவு செய்து (60 பேர்ச்சஸ்) அரை ஏக்கர் நிலத்திற்குட்பட்ட நிலத்தினை ஆலயத்திற்கு வழங்கினர். அதற்கு முன்னமே புதிய குடியிருப்பு தொடர் வீடுகளும் அவ்விடத்தில் அமைக்கப்பட்டன. அதற்கு அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமான் அவர்களின் முயற்சியின் பலனாக பொது ஜன ஐக்கியமுகன்னணியின் மாகாணசபை அமைச்சர் கௌரவ நெரஞ்சன் விக்ரமசிங்ஹ அவர்கள் குடியிருப்பிற்கான நிலத்தினையும், வீடுகளையும் அமைத்து கொடுத்து இம்மக்கள் நெஞ்சில் நீங்காத இடம் பிடித்தார். பின் புதிய நிலத்தில் ஆகம விதிக்கு அமைவாக புதியதோர் ஆலயம் கட்டத் தீர்மானிக்கப்பட்டு கட்டடக்கலைஞர் அராலியூர் எஸ்.எஸ். மகேஸ்வரன் அவர்களிடத்தில் பொறுப்பளிக்கப்பட்டது. அவரின் திட்ட வரைபடத்திற்கு அமைவாக 09.02.2003 இல் கல்நாட்டு வைபவம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அதன்படியே மூலஸ்தானம், அர்த்த மண்டபம் ஆகியவற்றோடு நீளமான பெருமண்டபமும் அமையப்பெற்றது. அளவான கோயிலாக அழகான கோயிலாக நிர்மாணிக்கப்பட்டது. இதில் கட்டிடக்கலைஞராக அராலியூர் அருட்கலைத்திலகம் எஸ்.எஸ். மகேஸ்வரன் அவர்களின் தலைமையில் வந்தாறு மூலையூர் இளம்கலைத் திலகம் மு.ரமேஷ்குமார் அவர்களின் கைவண்ணத்தில் திருவாரூர் ராஜசேர், சித்தாண்டிவரதன், நாகலிங்கம் பிரபாகரன், கா.ஜெகதீஸ்வரன், ச.கனேசலிங்கம், ஜெயகுமார், சின்னத்தம்பி குமார் ஆகியோர் இக்கட்டிடப் பணியின் முன்னின்று உழைத்தனர். இவ்வழகிய ஆலயம் ஒரு புதிய குடமுழுக்குப் பெருஞ்சாந்தியைச் செய்ய திருவருள் கூடியதால் மட்டுமாநகர் தந்த மாதவச் செம்மல் சித்தாந்தவித்தகர், ஆச்சாரிய தீபம் அருட்கவியரசு விஸ்வபிரம்மம் வை.இ.எஸ். காந்தன் குருக்கள் அவர்களின் தலைமையில் 28-01-205 வெள்ளிக்கிழம தொடங்கி 31-01-2005 திங்கட்கிழமை சஷ்டி நிதியும் சித்திரை நட்சத்திரமும் சித்தயோகமும் இடபலக்கினமும் பொருந்திய பகல் 12.36 இலிருந்து 2 மணி வரை இருந்த தெய்வீக சுபமுகூர்த்த வேளையில் பல்லாயிரக் கணக்கான அடியார்களின் பக்திப்பரவச ஓம் சக்தி ஓசையில மகாகும்பாபிஷேகம் எனும் குடமுழுக்குப் பெருஞ்சாந்தி சிறப்பாக நடை பெற்றது. இதில் மாவத்தகம ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய பிரதமகுரு ஸ்ரீ சண்முகசுந்தரம் சுவாமிஜி, மாகாணசபை அமைச்சர் நெரஞ்சன் விக்ரமசிங்ஹ அரச முதலீட்டுச் சபை அதிகாரிகள், மாவத்தகம பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோரை கலந்து சிறப்பித்தார்கள். இக்கும்பாபிஷேகத்திற்கு உதவிக் குருமார்களாக விஸ்வபிரம்மஸ்ரீ மு.யோகநாதன் ஐயா, சிவஸ்ரீ நா. சண்முகதாஸ் (ஜீவன் ஐயா) சிவஸ்ரீ காந்தி ஐயா, சிவஸ்ரீ பிரதீஸ் ஐயா ஆகியோருடன் உதவியாளர்களாக எஸ்.சுப்ரமணியம், விஜயன், கேதீஸ் ஆகியோர் நின்று உதவினர். ஆலய பரிபாலன சபையாளர்களாக தலைவர் மகேஸ்வரன், செயலாளர் சுந்தரகுமார் போன்றோரின் உதவியும், பெருமுயற்சியும் இக்கும்பாபிஷேகத்திற்கு பெரும் துணையாக அமைந்தன. இவர்களோடு மாவத்தக டௌர் பகுதிகளில் வாழ்கின்ற இளைஞர்களும், பெரியோர்களும், தாய்மார்களும், சகோதரிகளுமாக இணைந்து அளப்பெரும்

தொண்டாற்றினர். இக்கும்பாபிஷேகத்தின் பெருமை சொல்லுதற்கரியது. காரணம் கும்பாபிஷேகப் பிரதம குரு விஸ்வபிரம்மம் காந்தன் குருக்கள் தனது நற்சிந்தனையிலே அடிக்கடி கூறுவதுபோல "ஒரு கும்பாபிஷேகம் ஆலயத்திற்கு மட்டுமல்ல அவ்வூருக்கும் மக்களுக்குமே" அதே போல் இம்மாவத்தகம டெனவர பிரதேசம் புது மற்றத்தைக் கண்டது. இந்து சமய மக்கள் உறங்கிக் கிடந்த நிலையிலிருந்து மாறி விழிப்புப் பெற்றனர். தாய் மொழியாகிய தமிழில் காதல் கொண்டனர். செந்தமிழும் சிங்களமும் சேர்ந்து நர்த்தனமாடிய நா. செந்தமிழில் கவிபாடியது. தங்களை முழுமையான இந்துக்களாக அடையாளப்படுத்தினர். அதுமாத்திரமன்றி கும்பாபிஷேகம் நிறைவுற்று மண்டலாபிஷேக நிறைவு நாளாக 16.02.2005 சங்காபிஷேக தினத்தன்று மாபெரும் பாற்குடப்பவனி நடைபெற்றது. அதில் ஆயிரக்கணக்கான அடியர்கள் மாவத்தக பிரதான வீதியின் ஊடாக பல்லின மக்கள் பார்த்துப் பரவசம் அடைய மஞ்சல், சிவப்பு ஆடையணிந்த மங்கையர்கள் தங்கள் தலையில் பாற்குடங்ளைச் சுமந்து பவனியாக வந்த காட்சி இச்சரித்திரத்திற்கோர் சாட்சி மாவத்தகம ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்திலிருந்து புறப்பட்ட இப்பவனியில் பெரும் திரளான ஆண் அடியார்களும் கலந்து கொண்டார்கள். இந்த நிகழ்வு ஆலயத்தை வந்தடைந்து மாபெரும் மகாயாகத்துடன் சங்காபிஷேகம், பாலாபிஷேகம் நடைபெற்று அன்றிரவு விஷேட அலங்காரத் திருவூஞ்சலில் அம்மன் இருத்தப்பட்டு அருட்கவியரசு கண்மணிதாஸன் அவர்களால் இயற்றப்பட்ட திருப்பொன்னூஞ்சல் பாடல் நூலுருப்பெற்ற அன்றே அரங்கேற்றப்பட்டு அப்பாடலின் இசையில் அம்மன் ஊஞ்சலில் ஆட அன்றைய பூசை அனைத்தும் இனிது நிறைவேறியதோடு கும்பாபிஷேக நிகழ்வுகளும் மங்கலகரமாக நிறைவோங்கின. அதன் பின் காலை, மாலை எனும் இரண்டு வேளை பூசைகளோடு வெள்ளிக்கிழமை மூன்று வேளை பூசைகளும் நடைபெற்று வருகின்றன.

முதலாவது பூரணை பூசையாக 23-02-2005 புதன் கிழமை அன்று மாபெரும் பூரணை பூசை நடைபெற்றது. அடியாரகளின் கரங்களினால் அம்மனுக்கு பாலபிஷேகம், சுமங்கலிகளின் தமிழில் கும்கும அர்ச்சனையும், அடியார்களின் விஷேட அன்னதானமும் நடைபெற்றது.

கும்பாபிஷேகத்தின் பின் ஒரு புதிய கட்டமைப்பைத் தோற்றுவித்தனர். அதன்படி மீண்டும் ஆறுமுகம் மகேஸ்வரன் அவர்களின் தலைமையில் 07-03-2005 இல் நிருவாகம் அமைக்கப்பட்டது. மேற் குறித்த ஆலயத்தின் வரலாற்று விபரங்கள் நேர்காணல் மூலமாகவும் சில ஆவணங்கள் மூலமாகவும் பெறப்பட்டது. இதில் முன்னுக்குப் பின் முரண்பாடுகள் காணப்பட்டாலும் அதிகளவு உண்மைத் தரவுகளே "குற்றம் குறைந்து குணங் கொள்ளடல் கற்றறிந்தோர் கடமையாகும்."


SRI MOOKAMBIKA.

## ලොව අන් රටවල් අතුරින් ගත්විට ඉතා සුන්දර රමණීය පුණ්‍යවන්ත භූමියකි අපගේ ශ්‍රී ලංකාව
## (දේවාලයේ ඉතිහාසය)

ලොව පුරා වෙසෙන හින්දු භක්තිකයින් විසින් අතීත ඉතිහාසයේ සිට ශිව භූමිය ලෙස ශ්‍රී ලංකාව පුදනු ලබයි . ලොව ප්‍රසිද්ධ බොහෝ හින්දු දේවස්ථාන මුළු ලොවම පුදුමයට පත්කළ කැටයම් සහ මූර්ති, වලින් නිර්මාණාත්මකව නිර්මාණය කරන ලද වෙහෙරවිහාර, ක්‍රිස්තියානි පල්ලි ගාම්භිරත්වය සහ ඉස්ලාම් පල්ලියවලින් සෙන් බාංගු නාදයෙන් මෙරට දේව ආශිර්වාදයෙන් පිරී ඉතිරී යයි. නේපාලයේ ලුම්බිණිහි සල් වනයේ උපත ලැබූ මුළු ලොවටම ධර්මය දේශනා කළ ධර්මයේ ප්‍රතිරූපය ලෙස සැලකෙන බුදුරජාණන් වහන්සේ මෙරටට තුන් වතාවක් වැඩම කිරීම තුළින් ශ්‍රී ලංකාවේ පුණ්‍යභාවය මනාලෙස අවබෝධවෙයි. තවද යෝගර් ස්වාමි, සෙල්ලාච්චි මෑණියන්, කුලන්දයි වේල් ස්වාමි, වඩිවේල් ස්වාමි, පෙරියානයික්කුට්ටි ස්වාමි, නවානද සිත්තර් ස්වාමි, සිත්තානෙයිකුට්ටි ස්වාමි. යන ස්වාමිවරුන් ලක්මෑණියන් විසින් ලොවට බිහිකළ අපගේ මහගු දායාද වේ.

මෙවන් ප්‍රවෘඩ ඉතිහාසයක් ඇති ශ්‍රී ලංකාවේ ඇති ස්වභාවික උස් කඳු , වනාන්තර, ඇළ දොළ ගංගා, සිරිපා මුදුනින් ගලා එන මහවැලිය සහ වෙරළ තීරයේ ඇති සුදු වැලිකතර යන ස්වභාවික ආශිර්වාද නිසාම ඉතිහාසයේ සිටම මෙරටට දෙස් විදෙස් සියලු දෙනාගේ ආශිර්වාදය , අවධානය යොමුවිය. මෙම සුන්දර ලංකාව තුළ තවත් එක් මුතු ඇටයක් මෙන් සියල්ල එක්තැන් කළ පළාතයි සුන්දර වයඹ දේශය.

### වයඹ අසිරිය

වයඹ පළාතේ දෙනෙත් වන් කුරුණෑගල සහ පුත්තලම යන දිස්ත්‍රික්කයන් පිහිටා ඇත. එසේම කුරුණෑගල දිස්ත්‍රික්කය ප්‍රවෘඩ ඉතිහාසයකට උරුමකම් කියයි. තවද උතුරු නැගෙනහිර පළාතට දකුණෙන් ඇති ප්‍රධාන දොරටුව ලෙසද ලංකාවේ සියලු ප්‍රධාන නගරයන් කරා පහසුවෙන් ළගාවියහැකි පුළුල් මාර්ග පද්ධතියක්ද මෙම පළාත තුළ පිහිටා තිබීම කුරුණෑගල නගරයේ විශේෂත්වයට මහත් රුකුලක්වේ.

කුරුණෑගලට බස්නාහිරෙන් පිහිටා ඇති ලොව පැරණිම ශිව දේවාලයක් ලෙස සැලකෙන මුන්නේෂ්වරම් දේවාලය පිහිටා තිබීම තුළින් මුලු ලොවපුරා වෙසෙන ශිව භක්තිකයන්ගේ අවධානය සහ භක්තිය මෙම පළාතට යොමුවිය. මේ සියල්ල සමගින් රමණීය කඳුවැටි පිහිටි අති සුන්දර නගරයකි කුරුණෑගල නගරය.

කුරුණෑගල නගර මධ්‍යයයේ පිහිටි
හස්තියකමෙන් විශාල පර්වතය දකින විට,
මා හට මතකයට නැගෙන්නේ කතරගම දෙවියන්ව
සිය කරමත ඔසවාගෙන යන මහ දළ
හස්ති රාජයෙක් මෙනි.

මේ සියල්ල සමඟින් රමණීය කඳුවලින් ගලා එන සුසිනිඳු ජලයෙන් පෝෂිත ශීතල දේවියක් ලෙස කුරුණෑගල හැඳින්විය හැක. මෙලෙස වටිනා රුක්ෂවලින් පිරුණු නගරයේ බහුලව දක්නට ඇත්තේ කප් රුකක් වන පොල් ගස්ය.

මෙවන් ඉතිහාසයක් ඇති කුරුණෑගල අතීතයේ හස්තිශෛලපුර , ඇතුගල් පුර යන පාලි භාෂාව සමග මිශ්‍රවූ තේජාන්විත පැරණි නම් රැසකින්ද හදුන්වනු ලබන කුරුණෑගල යන නම පසුකාලයේ ප්‍රසිද්ධ වූ නමුත් එම පැරණි නම්ද තවමත් භාවිතයේ ඇත.

මෙම කුරුණෑගල රාජධානිය ප්‍රෞඪත්වය ඔප් නංවනවා අනුරාධපුර, පොළොන්නරුව යන රාජධානිවලින් පසු විශිෂ්ඨ රාජධානියක්ද 1287 වන විට දෙවෙනි බුවනෙක බාහු රජතුමා විසින් මෙය කුරුණෑගල කේන්ද්‍රයට ගනිමින් ඔහුගේ අභිමානවත් පාලනය ආරම්භ කලේය. තවද මෙම පළාත තුළ පිහිටා තිබූ. දඹදෙණිය, යාපහුව, යන රාජධානි නිසාවෙන්ම ඈත අතීතයේ සිටම සියළු දෙනාගේ අවධානයට පාත්‍රවිය. එසේම කුරුණෑගල පිහිටි ඈත්කද රජමහා විහාරය, රිදීවිහාරය මකුලාන විහාරය වැනි වෙහෙර විහාරස්ථාන ඈත අතීතයේ ප්‍රෞඪත්වය විදහා දක්වන අතර බොහෝ ප්‍රසිද්ධියටද පත්වී ඇත. එසේම කුරුණෑගල නගරයේ පිහිටි කදිරේසන් කෝවිල සෙල්වවිනායගර් කෝවිල, මුප්පුරනායගි අම්මන් දේවාලද බෞද්ධ හින්දුබැතිමතුන් විසින් භක්ති පූර්වකව වැදුම් පිදුම් කරයි. තවද කුරුණෑගල නගරය තුල, පිහිටි එකම හින්දු විද්‍යාලය වන හින්දු දෙමළ විද්‍යාලයද පිහිටා තිබීම ජාතික එකමුතු භාවය තවතවත් තහවුරු කරයි. කුරුණෑගල සිට මහනුවර ප්‍රධාන මාර්ගයෙන් යනවිට මාර්ගයේ දෙපස ඇති සුන්දර කෙත්යාය උස් කඳුවැටි . සිට නරඹමින් යන විට මෙම මාර්ගයේ පළමුවෙන්ම ඇති මුස්ලිම් සහෝදරයන් බහුතරව ජීවත්වන තෙලියාගොන්න නගරය පසුකර යනවිට ඇති මල්ලවපිටිය හන්දියෙන් වමට ඇති පාර රිදීවිහාරයට යන මාර්ගයයි. මෙම මංසන්දියේ ද අමාමහා මෑනියන්ගේ පිළිමයක් ඇත. එය වැදපුදා එනවිට ඇති පිළිකඩ යන පැරණි ලක්ෂම්වත්ත යන සුන්දර ගම්මානය ඇත. මෙම ගම්මනය අතීතයේ ලක්ෂම්වත්ත වතු සමූහයට අයත්ව තිබුණි. සරුසාර පොල් රුක්වලින් යුත් ප්‍රදේශයක් විය. එසේම කිරි,මී කිරි

සඳහා සුප්‍රසිද්ධ ගම්මානයක් විය. ද්‍රවිඩ ජනයා බහුතරයක්ම වාසය කල මෙම ප්‍රදේශය නාගරීකකරණයේ සංවර්ධනයක් සමගින් සීග්‍ර දියුණුවක් කරායන ප්‍රදේශයක් බවට පරිවර්ථනය වී ඇත. ඉන් පසු අප පැමිණියේ මාවතගම නැමති අපගේ මවු භූමියටයි. මාවතගම යනු මහ මාවතක් මෙම නගරය කරා යන හෙයින් මාවතගම ලෙස මෙය හඳුන්වනු ලබති. මෙම නගරය කුඩා නගරයක් වූ නමුත් සියල්ල සපිරි සුන්දර නගරයකි. මාවතගම කුඩා ගම් රැසකින් මැදිවී පිහිටා ඇති. මෙහි වාසය කරන සියළු ජනයා ඉතා එකමුව, සහයෝගයෙන් සමගියෙන් ජීවත් වෙයි. බොහෝ අය සිංහල සහ දෙමළ භාෂාවෙන් සරලව භාවිතා කරයි. සියළු දේවල් මිලදී ගත හැකි කඩ සාප්පු ඉරිදා දිනයන්හි විශාල ඉරිදා පොල නගර මධ්‍යයේ සාම බෝධි විහාරය ක්‍රිස්තියානි අය විසින් පුදනු ලබන ජේසුස් වහන්සේගේ ඉතිහාසය සිහි දක්වන කල්වාරිය නරඹමින් කඳුලු සලමින් හැරෙනවිට ප්‍රධාන මාර්ගයේ මුස්ලිම් පල්ලිය පිහිටා ඇත. මේ සියල්ල  සමගින් මාවතගම නගරයට නැගෙනහිර දෙසින් (බරන්දන මාර්ගයේ) ශ්‍රී මුත්තුමාරි අම්මාන් දේවස්ථානය පිහිටා ඇත. මෙම දේවාලය වසර 200 ක ප්‍රවාඩ ඉතිහාසයකට උරුමකම් කියයි. මෙහි ඈත අතීතයේ මහ උත්සවාකාරයෙන් තේරු උත්සවය පැවැත්වූ බව ඉතා භක්ති පූර්වකව ජනයා පවසයි. දිනපතා මෙහි පැමිණෙන සියගණන් බැතිමතුන් ආගම්, ජාති, කුල භේදයෙන් තොරව දේව ආශිර්වාදය ලබයි.

මෙවන් සුන්දර මාවතගම නගරය පසුකර මීටර් 300 ක් පමණ යන විට ඇති ඩෙනවර් මංසන්දියෙන් දෙපස ඇති ආයෝජන මණ්ඩලයට අයත් ගොඩනැගිලි අතරින් නැගෙනහිර දෙසට ඇති මාර්ගයේ කි.මී. 1 ක් පමණ යන විට පුංචි වත්ත නමින් අතීතයේ හඳුන්වනු ලැබූ ඩෙනවර් වත්ත අක්කර 363 ක විස්තීරණයෙන් යුත් මෙම වතුයායට කුමාරි සී. ප්‍රනාන්දු යන අය මෙහි අයිතිකාර පාර්ශවය විය. ආරම්භයේ මෙහි පවුල් 49 ක්ද එහි සාමාජිකයෝ 120 දෙනෙක් ද වාසය කලා. බ්‍රිතාන්‍ය ජාතිකයින් විසින් මෙම වතු වගා කිරීම සහ පාලනය කිරීම සිදුවුණා. ඩෙනවර් අරම්පොල සහ තෝරගොල්ල යන වතු සිරෝ නම් ඉංග්‍රීසි පාලකතුමා විසින් පාලනය කෙරිණි.

1936.10.01 වෙනි දින මෙහි ඉන්දියාවේ උපන් පසු කාලයේ යාපනයේ විසූ සුබ්‍රමනියම් යන අය විසින් කුඩා දේවාලයක් ස්ථාපිත කෙරුණි. සුබ්‍රමනියම් කන්දයියා කරුප්පයියා, පලනියාන්ඩි යන අය මෙහි ප්‍රථම පූජක වරුන් විය. 1942 වසරේ දී මෙම දේවාලය සුබ්‍රමනියම්, පලනියාන්ඩි, මාරිමුත්තු පොන්නුසාමි යන අයගේ සහය ඇතිව නවීකරණය කරන ලදී.

1942 වන විට දෙවන ලෝක යුද්ධ කාලයේ මෙම ඩෙනවර් වතු ප්‍රදේශයේද ඉන්දියානු හමුදාව ස්ථානගත වී සිටි කාලයේද මෙම දේවාලය ඒ අය විසින්ද පුදනු

ලැබුණි. 1960 වසරේ දී මෙහි මහ තේරු උත්සවයක් පැවැත්වූ අතර එතැන් සිට වසර 3 ක් මෙම තේරු උත්සවය උත්සවාකාරයෙන් පැවැත්විය. ඒ වන විට සින්නත්තම්බි සහ පලනියාන්ඩියන අය එහි පූජකවරුන් විය. මේ වකවානුවේ බොහෝ හාස්කම් මෙහි සිදුවූ බව ජනයා පවසයි.

### අඳුරු යුගය

ඩී.එස්.පී. පීරිස් නැමති වතු පාලක විසින් මෙහි ජනයාට බොහෝ හිරිහැර සිදු විය. මොහු විසින් පාලනය කළ කාලයේ මෙම දේවාලයේ ආගමික කටයුතු සිදු කිරීමටද අපහසු විය. එහෙයින් ජනතාවගේ විරෝධය සමගින් මොහුව පලවාහැර ඉන්පසුව මෙම තනතුරට පැමිණ මෙන්ඩිස් නම් පාලකතුමා පත් කිරීමෙන් පසුව ඔහුගේ විනිත පාලනය නිසාවෙන් ඔහු කාගේත් ප්‍රසාදය ලබමින් මෙම දේවාලයද යළි ගොඩනැගීමට පියවර ගත්තේය. මුත්තුමාරි අම්මාන් ආශිර්වාදය මෙතුමාට ලැබුණි. මෙන්ඩිස් පාලකතුමාගේ පාලනය ඩෙනවර් ඉතිහාසයේ සුවිශේෂී කාලයක් විය. ඔහු මෙම දේවාලයේ දියුණුව සමගින් ජනතාවද නිසි මගට යොමු කිරීම කෙරෙහි වැඩි අවධානය යොමු කලේය. එම නිසා 1960 සිට මෙම දේවාලයේ වසර 3 ක් තේරු උත්සවය පැවැත්විය. තුන්වෙනි වතාවට පැවති තේරු උත්සවයේ දී එම තේරුව මාවතගම නගරයට පැමිණෙන විට එහි සිටි පිරිසක් තේරුව ඉදිරියට පැමිණ පිරිසට පහර දී මෙයට බාදාවන් ඇති කලේය. එහිදී පූජකතුමා ඉදිරිපස බලමින් දෙවියන් යාඥා කරමින් දෙහිගෙඩියක් විසි කරන විට එය මුත්තුමාරි අම්මාන් පිළිරුවේ රැඳුනි. ඉනි පසු බාධාවන් පසු කරමින් තේරුව දේවාලයට පැමිණීමෙන් අනතුරුව මේ බාධාවක් ඇති කල අය බොහෝ දුක් ගැටළුවලට මුහුණ දීමෙන් පසුව මෑණියන්ගෙන් සමාව අයදිමින් මෑණියන්ගේ ආශිර්වාදයෙන් සුවය ලැබුණි.

මෙම දේවාලයට අතීතයේ සිටම ද්‍රවිඩ ජනයාමෙන් සමානව බෞද්ධ අයද පැමිණියහ. බෞද්ධ හින්දු ජනයා එදත් අදත් කවදත් බෙදීමට නොහැකි බැඳීමකින් ජීවත් වෙයි. ඇතැම් විට ජනතාව අතර භේදයන් ඇතිවිය. මෙයට ප්‍රධාන හේතුව වනුයේ දේශපාලන වාසිය සඳහා ඇතිකල නොයෙක් භේදයන් බව කවුරුත් පිළිගන්නා කරුණකි. මෙලෙස 1970 න් පසුව තේරු උත්සවය නොපැවැත්වූ අතර මාවතගම සහ ඩෙනවර් ජනතාවගේ සහයෝගයෙන් මෙම දේවාලය යළි ගොඩ නැගුණි.

## දියුණුව සහ දේවාලයේ ඇති වූ අර්බුදකාරී තත්වයන්.

දීර්ඝ කාලයක් දේවාලයේ පූජා කටයුතුවල නිරතව සිටි සින්නත්තම්බි යන අය විසින් දේවාලය වසා දැමීමෙන් පසුව කෙටිකාලයක් මෙම දේවාලයේ සියලු කටයුතු අඩපන විය. ඉන්පසුව ප්‍රදේශයේ තරුණයන්ගේ සහය ඇතිව සුබ්‍රමනියම්, මහේෂ්වරන් යන අය විසින් වසා තිබූ දොර කඩා නැවත දේවාලයේ කටයුතු ආරම්භ කරන ලදි. ඉන් පසුව ප්‍රදේශවාසී තරුණ තරුණියන්ගේද සහය ඇතිව දේවාලය ගොඩනගමින් 1997.12.03 වෙනි දින මහ කොත් පැලඳවීමේ උත්සවය පවත්වන ලදි. එවකට දේවාල පරිපාලන කමිටුවේ සභාපති මුත්තුක්කුමාර් මහතාගේ ප්‍රධානත්වයෙන් සුබ්‍රමනියම්, මහේෂ්වරන් සුන්දරකුමාර්, මහාදේවන්, රාජේන්ද්‍රන්, පී. මරුදේ යන අය සහ අනෙකුත් ප්‍රදේශවාසී තරුණයන්ගේ ද සහභාගීත්වයෙන් රටපුරා ආධාර එකතු කිරීම සිදු වුණා. මෙලෙස දේවාලයේ කටයුතු අඩියරෙන් අඩියර සාර්ථක ලෙස කෙරුණි. ඉන්පසුව ඉතා කැපවීමෙන් ක්‍රියා කල මුත්තුක්මාර් ඉල්ලා අස් වීමෙන් පසුව සුබ්‍රමනියම් මහතා සභාපති ලෙස පත්කිරීමෙන් පසුව ඔහු විසින් ද මෙම කටයුතු සාර්ථක ලෙස සිදු විය.

ඉන් පසුව මෙම දේවාලයේ සියලු කටයුතු වැඩි වැඩියෙන් සාර්ථක ගර ගැනීමට දේව ආශිර්වාදය ලැබුණි. මේවන විට මෙම ප්‍රදේශයේ ආයෝජන ප්‍රවර්ධන කලාපය ඉදි කිරීමෙන් පසුව මෙම දේවාලය වෙනත් ස්ථානයක ඉඩම ලබා ගැනීමට සහ එහි පදිංචිව සිටි ජනතාවටද සිය නිවෙස් ඉදිකර ගැනීමටද අවශ්‍ය ඉඩම් ලබා ගැනීමට දිවංගත සෞම්ය මූර්ත්ති තොණ්ඩමන් සහ වයඹ පළාතේ අමාත්‍ය ගරු නෙරංජන් වික්‍රමසිංහ මැතිතුමාද කැප වීමෙන් ක්‍රියා කලේය. ඉන් පසුව මෙහි හින්දු මූර්ති ශිල්පයට අනුව නව දේවාලය නිර්මාණය කිරීමේ කාර්ය අරාලියූර් එස්. මහේෂ්වරන් මහතා වෙත භාර දෙන ලදි. ඔහුගේ මග පෙන්වීම යටතේ රමේෂ්කුමාර්, ඉන්දියාවේ තිරුවාරූප් රාජසේකර්, සින්නාන්ඩි වරදන්, නාකලිංගම්, ප්‍රභාකරන්, කා. ජෙගදීස්වරන්, ස. ගනේසලිංගම්, ජෙයකුමාර්, සින්නත්තම්බි, කුමාර් යන ශිල්පීන්ගේ සහභාගීත්වයෙන් මෙම දේවාලය නිර්මාණාත්මකව නිර්මාණය කර ඇත.

ඉන් පසුව මෙම දේවාලයේ කොත්පැලඳීමේ උත්සවය සඳහා වූ විශේෂ පූජාව 28.01.2005 වෙනි දින ආරම්භ කර 31.01.2005 වෙනි දින විශ්වබ්‍රම්මම් කාන්දන් පූජකතුමා විසින් මාවතගම මුත්තුමාරි අම්මාන් දේවස්ථානයේ පූජකතුමා සන්මුග සුන්දරම් ස්වාමි ජී ගේ ප්‍රධානත්වයෙන් මාවතගම පොලිසියේ ස්ථානභාර නිලධාරි තුමාගේ සහ ආයෝජන මණ්ඩලයේ නිලධාරින්ගේ සහ දහස් සංඛ්‍යාත ජනතාවගේ සහභාගීත්වයෙන් සිදු කරන ලදි. මෙම පූජාවට විශ්වබ්‍රම්ම ශ්‍රී නාරායනන් ශන්මුගදාස් යෝගනාදන්, සිව ශ්‍රී ගාන්ධි, සිව ශ්‍රී ප්‍රදීප් යන

මෙලෙස 09.02.2003
මෙදින මෙම දේවාලයට මුල්ගල් තැබීමේ උත්සවය සිදුවිය. ඉන්පසුව අරාලියූර් එස්.එස්. මහේස්වරන් මහතාගේ ප්‍රධානත්වයෙන් මූර්ති නිර්මාන ශිල්පී වන්දාරුමුලෙයි රමේශ්කුමාර්

ඉන්දියාවෙන් පැමිණි රාජසේකර් යන අය සමග වරදන් නාගලිංගම් ප්‍රභාකරන් ජෙගදීස්වරන්, ගනේසම්ංගම්, ජෙයකුමාර්, සින්හත්තම්බි, කුමාර් යන ශිල්පීන්ගේද සහය ඇතිව මෙම දේවාලය නිර්මාණය කරන ලදී. ඉන්පසුව කොත් පැලදවීමේ උත්සවය සිදුකිරීම පිණිස මඩකලපුවේ සිට. පැමිණි විශ්වබ්‍රම්මම් මෙ.දු.එස්.කානිදන් පූජකතුමා ආරම්භවූ විශේෂ පූජාවන් සමගින් 31.01.2005 වෙනි දින මාවතගම ශ්‍රී මුත්කුමාරි අම්මන් දේවස්ථානයේ ප්‍රධාන පූජක තුමා සන්මුගසුන්දරම් ස්වාමි ජී, වයඹ පළාත් සභාවේ අමාත්‍ය ගරු නෙරංජන් වික්‍රමසිංහ, ආයෝජන මණ්ඩලයේ නිලධාරින් , මාවතගම පොලිසියේ ස්ථානාධිපති තුමා සමගින් දහස් සංඛ්‍යාත ජනතාවගේ සහභාගීත්වය මත කොත්පැලැන්දවීම උත්සවය උත්සවාකාරයෙන් සිදුකෙරුනි.

විශ්ව බ්‍රම්මම් කාන්දන් පූජකතුමා සමගින් ශිවශ්‍රී සම්මුගදාස විශ්ව බ්‍රම්ම (ශ්‍රී යෝගනාදන් ගාන්ධි, ශිවශ්‍රී ප්‍රදීස්, යන පූජකතුමන්ලා සහභාගීත්වය ඔවුන්ට සහයකයින් ලෙස එස්. සුබ්‍රමනියම්, විජයන්, කේදීස් යන අයද සහභාගි විය. මෙම උත්සවය සර්වප්‍රකාරයෙන් කමිටුවේ සභාපති, මහේෂ්වරන්, ලේකම් සුන්දරකුමාර් යන මහත්වරුන් සමගින් පරිපාලක කමිටුවේ සෙසු නිලධාරින්ද, ප්‍රදේශවාසී සියළු මවුපිය, සහෝදර සහෝදරියන්ගේද පූර්ණ සහයෝගය ලැබුණි.

මෙම උත්සවය සමගින් ප්‍රදේශයේ ජනයා අතර දේවාලය සමග ඉතා සමීප බැඳීමක් ඇතිවිය. තවද 16.01.2005 වෙනි දින තවත් විශේෂ පූජාවක් සිදුකෙරුනි . මෙම පූජාව සඳහා මාවතගම ශ්‍රී මුත්කුමාරි අම්මන් දේවාලයේ සිට දහසකට ආසන්න සිය හිසමත කිරිකලය ගනිමින් විශාල පෙරහැරකින් මාවතගම නගරය කරා මෙම දේවාලයට පැමිණ විශේෂ පූජාවට සහභාගිවිය.

ඉන්පසු 23.02.2005 වෙනි දින විශේෂ පෝදින පූජාවක්ද මහෝත්සවාකාරයෙන් පවත්වනලදි.
මෙම උත්සවයත්,පූජාවත් අවසන්වීමත් සමග දේවාලයට නව පරිපාලන කමිටුවක් 07.03.2005 වෙනි දින තෝරාපත් කර ඇත.

මෙම දේවාලයේ ඉතිහාසය ඇතුලත් මෙම පොත පිළියෙල කිරීම පිණිස ප්‍රදේශවාසී ජනයාගේද සහය ඇතිව බොහෝ තොරතුරු ලබා ගෙන ඇති නමුත් විවිධ දේවල් පිළිබඳව විවිධ අදහස් ඔවුන්ගෙන් ලැබුණි. මේ සියල්ල එකරැස්කර මෙය සකස් කිරීමේදී ඇතැම් කරුණු පිළිබඳව පරස්පර විරෝධී අදහස් ලැබූ නමුත් බොහෝ දේවල් සත්‍ය බව පෙනී යයි. කෙසේවුවත් මේ සියල්ල තුළින් යහපත් දේවල් පිළිබඳව අවධානය යොමුකිරීම මෙය කියවන ඔබහට යොමුකරමි...

# அன்னையின் அற்புதங்கள்

- 1974ம் ஆண்டு உயர்திரு சின்னத்தம்பி பூசகரின் மகன் குணசீலன் என்பவர் அன்னையின் சக்திக் கரகத்தை தலையில் சுமந்து வரும் போது திடீரென்று தலையிலிருந்து கரகம் மேல் எழுந்தது. அதை பார்த்துக் கொண்டிருந்த அடியார்கள் பக்திப்பரவசம் அடைந்தனர்.

- 1975ம் ஆண்டு மு. சுந்தரகுமார் என்பவர் முருகன் கரகத்தைத் தாங்கிவர எதிர்பாராத விதமாக உடனே அவரின் உடம்பில் பெரும் அம்மைக் கொப்புளங்கள் தோன்றியது. தலையிலிருந்து கால்வரை அம்மையின் முத்துக்கள் பரவியிருந்ததால் எதுவும் செய்யமுடியாது மிகவும் கஷ்டமான நிலையில் சுந்தரகுமார் எனும் அச்சிறுவன் அக்காகத்தைச் சுமந்து நடந்து வந்தான். அம்முத்தின் வேதனை அவனை வாட்டியது. இருந்தாலும் கையிலிருந்த கரகத்தை அவன் விடவில்லை. பகல் 12 மணி தொடக்கம் மறுநாட் காலை 6 மணி வரை இந்நிகழ்வு நடை பெற்றுக்கொண்டிருந்தது. அவ்வேளை பூசகர் சின்னத்தம்பி அவர்கள் அம்பாளின் சந்நிதியில் வந்து கதறி அழுதார், பாடல் பாடி உருகினார். பக்தியின் மேலீட்டினால் தன் தலையை தரையில் அடித்தார். இவ்வேண்டுதலுக்கு மனமிரங்கிய அம்மன் உடனே அம்மன் கொப்புளத்தின் வேதனையை குறைத்ததுடன் ஒரு கொப்புளமும் இல்லாமல் மேனியை பழைய நிலைக்கு உடனே மாற்றினாள். இது அதிசயிக்கத்தக்க அதிசயமாகும்.

- 29-01-2005 அன்று மாலை 5 மணியளவில் ஆதியம்மனிருந்த பழைய ஆலயத்திற்குச் சென்று அம்மனை புதிய ஆலயத்திற்கு எழுந்தருளச் செய்யும் நிகழ்வு நடைபெற்றுக் கொண்டிருந்தது. அவ்வேளையில் மழைமேகம் இல்லாத வானம் கறுத்துத் திரண்டது. இடி முழக்கம் இல்லாத பெருமழையாகப் பெய்து ஆலயத்தைச் சாந்திப்படுத்தியதோடு வீதியெல்லாம் மழைநீர் வழிந்தோடி அன்னை சென்ற இடமெல்லாம் மழை நீர் வழிந்தோடி கழுவி தூய்மைப்படுத்தப்பட்டது. அம்மன் ஆலயத்தை வந்தடைந்ததும் மழை ஓய்ந்து இடம் தந்தது. மாரி என்றால் மழை அல்லவா அந்த அன்னையின் அற்புதம் எண்ணுதற்கரியது.

## அன்னையின் பார்வையில் பத்தினிமலை

இப்புதிய ஆலயத்தின் தென்மேற்கு மூலையில் பத்தினிமலை எனும் அதிசயிக்கத் தக்க மலையொன்றுண்டு. அது நீண்ட பெரு வரலாரையுடையது. மலையின்உச்சியில் பெரும் சுரங்கப்பாதையுண்டு. இதில் யாரும் உட்புகுந்ததாக சான்றில்லை. காரணம் சென்றவர் திரும்பியதாக வரலாறில்லை. இம்மலையில் எதுவிதமான ஆலயங்களும் இல்லை. ஆனால் இதை நீண்டகாலமாக பத்தினிமலை என்றே இந்துக்கள் முதல் பௌத்தர் வரை சொல்கின்றனர். குறிப்பாக இங்கு பெண்கள் சென்றதாக சான்றில்லை. அத்தோடு அங்கு பொங்கல் செய்கின்ற பொங்கலைக் கூட வீட்டுக்குக் கொண்டு வருவதில்லை. இதில் இன்னோர் வரலாற்றுக்கதை இம்மலையில் ஓர் நல்லபாம்பு வசித்து வந்ததாகவும் அந்தப் பாம்பின் உடலில் ஒரு காயம் ஏற்பட்டதாகவும் அக்காயத்தை ஆற்றுவதற்கு அப்பாம்பு பலபேருடைய கனவில் தரிசனமாகி சொன்னதாகவும் அக் கனவின் உண்மையை யாரும் உணர்ந்து கொள்ளாததன் காரணமாக மீண்டும் அப்பாம்பு ஒரு சிங்கள அன்பரின் கனவில் கூறியது. அக்கனவினைக் கண்டு பரவசமடைந்த அன்பர் உடனே அம்மலைக்குச் சென்று அப்பாம்பின் நிலையைக் கண்டு மீண்டும் வந்து மருந்துகள் கொண்டு போய் பாம்பை சுகப்படுத்தினார். அதற்கு நன்றிக்கடனாக அப்பாம்பு நிலத்தில் 3 தடவை தன் படத்தால் அடித்து ஒரு சத்தியம் செய்தது. அதைப் பெற்றுக்கொண்ட அன்பர்

வேறோர் ஊருக்குச் சென்று கோயில் அமைத்து வழிபட்டதாக இவ்வூர் மூதாதையர் தெரிவிக்கின்றனர். இம்மலையில் தற்போதும் ஒரு வெள்ளை நாகமும் அதற்கெதிரிடையான கீரியும் வசித்து வருகிறது. அவை இரண்டும் பகைத்துக் கொள்வதில்லை. இம்மலையில் பெரும் ஜோதி தோன்றி வருவதாகவும் அறியப்படுகின்றது.

## கிறிஸ்தவ தேவாலயத்தின் மகிமை

இவ்வாலயத்தின் கிழக்கே ஆற்றின் மேற்புறமாக அற்புதம் நிறைந்த ஒரு கிறிஸ்தவ தேவாலயம் உண்டு. இத்தேவாலயத்தில் களவுகள் போனால் உடனே கிடைத்துவிடும் என்றும், தண்டிக்கப்படும் என்றும் பக்தர்கள் கூறுவதோடு அதை ஆரம்பித்த முத்தையா அவர்கள் இந்துமுறைப்படியே தரிசித்து வந்துள்ளார். இம்முத்தையா அவர்களின் வீட்டில் நடந்த ஒரு சேலைக் களவின் விடயத்தில் அவரின் ஒரு மகளை உடன் தண்டித்தாகத் தெரியப்படுகின்றது.

## மாடசாமி வழிபாடு

இவ்வாலயம் அம்மனாலயத்தின் மேற்கே அமையப்பெற்றுள்ளது. சிறிய ஆலயமாக இருந்தாலும் கீர்த்தி மிக்கது. அன்னை முத்துமாரிக்கு ஆண்டுற்சவம் நடைபெற்றதன் பின் இவ்வாலயத்திலேயே இடும்பன் வேள்வி எனப்படும் மாடசாமி வேள்வி நடைபெறும்.

## அன்னை ஆலயத்தின் தீமிதிப்பு

1998ஆம் ஆண்டில் இத்தீமிதிப்பு வைபவம் இவ்வாலயத்தில் தொடங்கியது. அதில் டேசிவலி செல்வராஜா என்பவரே முதன் முதலில் தீமித்தவராவர். அவரைத் தொடர்ந்து பக்திபூர்வமான இளைஞர்களான ரவிசங்கர், வேலுசாமி, இந்திரகுமார், நாதன் ஆகிய அடியார்களும் கலந்து சிறப்பித்தார்கள்.

## உடுக்கிசை வல்லாலர்கள்

மாரிமுத்துப் புசகர் சீனிவாசன் அருணாசாலம் அகியோர் டெனவர் தோட்டத்தில் வாழந்த உடுக்குச் சிந்தில் திறமையாளர்கள். அதே போல் டோலாக் இசையிலும் வல்லாலர்களாக மு.சுந்தர குமார், சி.பத்மநாதன் ஆகியோர் சிறப்பிடம் பெறுகின்றார்கள்.

## அன்னையின் பணிக்கு என்றும் உதவும் அன்பர்கள்

மாவத்தகம ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதம சுவாமி ஜி சண்முக சுந்தரம் அவர்கள், இவர் மாத்தளை மாநகரில் விரந்து மாவத்தகமையை வசிப்பிடமாகக் கொண்டு மிக இளவயது முதலே இம் மண்ணுக்கு உரிமையுடையவராக உள்ளார். இவர் இப்பிரதேசத்தல் சைவத் தமிழ் வளர்ச்சியல் கவனம் கொண்டவராகவும் இப்பிரதேச ஆலயங்களுக்கு பெரும் உதவி செய்பவராகவும் குறிப்பாக டெனவர் ஆலயத்திற்கும் பெரும் உதவி செய்பவராகவும் போற்றப்படுகிறார். அடுத்து பௌத்த மதத்தவராக இருந்தாலும் அன்னையின் அன்பிற்குப் பாத்திரமான தயானந்த அவர்கள் அன்னதான காலங்களில் பெரும் உதவியுடையவராக இருக்கிறார். அடுத்து ஆண்டுற்சவங்களில் அன்னையின் ரதபனிக்காக தனது வாகனத்தை கொடுத்துதவும் அன்பராக திரு ஜயசிங்ஹ அவர்கள் அன்றும் இன்றும் மதிக்கப்படுகிறார். இதேபோல அன்னையின் பூசைக் கைங்கரியங்களுக்காக பழங்கள் முதலியவற்றைக் கொடுத்துதவும் ஜம்போ என்று பிரியமாக அழைக்கப்படும் ராஜ்குமார் அவர்களின் சேவையும் பாராட்டுக்குரியது. ஆரம்ப காலத்தில் சடையன் சேவகன் அவர்கள் இவ்வலாயத்தின் வளர்ச்சியில் அளப்பெரும் கவனம் செலுத்தினார்.

## ஆலயத்திற்கு அன்பளிப்புச் செய்தவர்கள்

மூலஸ்தானத்தில் இருக்கும் கருங்கல் அம்மன் விக்கிரகத்தை சின்னையா சுப்ரமணியம் அவர்கள், சுப்பிராயன் செல்வராஜா அவர்களும் ஆலயத்திற்கு வாங்கி அன்பளிப்புச் செய்தனர். வினாயகன் விக்கிரகத்தை தற்போது செயலாளராக இருக்கும் மு.சுந்தரகுமார் அன்பளிப்புச் செய்தார். முருகன் விக்கிரகத்தை முன்னால் பூசகராக இருந்தவரும் தற்போது வெளிநாட்டில் இருப்பவருமான க.ரவிசங்கர் அன்பளிப்பச் செய்தார். சிங்கம் பலிபீடம் ஆகிய இரண்டையும் கண்ணன் பாக்கியநாதன் அன்பளிப்புச் செய்தார். அம்மனின் பிரதான கலசத்தை ஆறுமுகம் ராமராவ் வாங்கி அன்பளிப்புச் செய்தார். எழுந்தருளியம்மன் விக்கிரகத்தை ஆறுமுகம் சீதை அவர்கள் வாங்கி அன்பளிப்பச் செய்தனர். இவ்வாலயத்திற்காக ஒரு குத்துவிளக்கினை சண்முக சுந்தரம் சுவாமிஜி வாங்கி அன்பளிப்பாக வழங்கினார். இவ்வாலயத்திற்கான உண்டியலை ராஜா (New Star Iron Works) அவர்கள் வாங்கி அன்பளிப்புச் செய்தனர். இதில் மேற்குறித்த விக்கிரகங்கள் யாவும் 1997ம் ஆண்டு அன்பளிப்புச் செய்யப்பட்டவையே. அவையே இப்போது புதிய ஆலயத்திலும் ஸ்தாபனம் செய்யப்பட்டுள்ளது. இதில் தற்போது புதிய விக்கிரகங்களாக நவக்கிரக விக்கிரகங்களை நிதி அறவீட்டின் மூலம் பெற்றுக் கொண்டனர். அதற்குரிய ஆசனக் கற்களை முத்தையா சுந்தரகுமார், சின்னையா சுப்பிரமணியம், சுப்பிராயு செல்வராஜ் ஆகியோர் வாங்கிக் கொடுத்தனர். புதிய ஆலயத்திற்கான கலசம் முதலான புதிய பொருட்களை இக்கட்டிட ஒப்பநதக்காரரே வாங்கிக் கொடுத்தனர்.

## சிவராத்திரியும் சிவலிங்க வழிபாடும்

1975 ஆம் ஆண்டுக்கு முன்னதாக சிவராத்திரி நன்நாளில் ஒரு சிவலிங்கம் சுதையினால் செய்யப்பட்டு அதற்கு திருக்கேதீஸ்வர ஆலயத்தைப் போல் நீரால் அபிஷேகம் செய்யப்பட்டது. இதை முதன்முதலில் தொடக்கி வைத்தவர் இப்பிரதேசத்தின் முன்னோடியாகவும் தோட்டப்பகுதி மக்களின்முன்னோடியாகவும் இருந்து செயல்பட்ட 1990 ஆம் ஆண்டு காலத்தில் திடீரென்று திட்டமிட்ட சடதியால் காணாமல் போன அமரர் மாணிக்கம் பிள்ளை அவர்கள் இப்பணியைத் தொடங்க உயர்திரு வேலுச்சாமி அன்றிலிருந்து இப்பணியைச் சிறப்பாக செய்து வருகிறார். சிவராத்திரி காலங்களில் மிக்க சிறப்பாக இங்கு நிகழ்வுகள் நடைபெறும். கும்பாபிஷேகத்துக்க பின் நடைபெற்ற முதலாவது சிவராத்திரி நிகழ்வான 08-03-2005 அன்று நடைபெற்ற சிவராத்திரி விழாவாக இல்லாமல் விரதமாகப் புனிதப்படுத்தப்பட்டு உயிரோட்டம் மிகுந்த பானலிங்கம், ஸ்படிக லிங்கம், நவபாஷான லிங்கம், அர்த நாரீஸ்வர லிங்கம், சுவர்ணலிங்கம் ஆகியவற்றிற்கு அடியார்கள் தங்கள் கைகளால் பாலபிஷேகம் செய்து, வில்வார்ச்சனை செய்து ஆகமவிதிக்கு அமைவாக வழிபாடு செய்ததோடு முதன் முதலாக டெனவர் அம்மன் ஆலயத்தில் இருந்து பக்திமிகு பாடல்கள் பாடி அடியார்கள் யாபேரும் மாவத்தகம ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்திற்குச் சென்ற காட்சி உள்ளத்தையும் உணர்வையும் உருக்கக் கூடியதாக இருந்தது.

## இப்பிரதேசத்தில் வாழும் இந்துக் குடும்பங்களின் மொத்தத் தொகை

மாவத்தகம 2000
டெனவர்:- 60 இந்துக்குடும்பங்கள்

தற்போது ஆதி அம்மனுக்கு ஒரு அழகான சிறிய ஆலயத்தை அமைக்கும் பெரும் பணியில் சின்னையா சுப்பிரமணியம் அவர்கள் பெருமுயற்சி செய்து வருகின்றார். அவருக்கு உதவியாக ஆரியதாச போன்றோர் இருக்கின்றார்கள்.

## டெனவர் பகுதியில் பொது அமைப்புகளும் அவர்களின் செயற்பாடுகளும்

டெனவர் பகுதியில் வாழ்கின்ற தமிழ், சிங்கள மக்களின் நலத்தைக் கருத்திற் கொண்டு அவர்களின் அந்திமகால நிகழ்வுகளில் உதவியமைப்பினராக ஒரு நலன்புரி சங்கத்தைத் தோற்றுவித்தனர். அதன் தலைவராக தர்மராஜா, செயலாளர் அன்னக்கிளி, பொருளாளர் குசுமாவதி ஆகியோர் செயல்பட்டு வருகிறார்கள். இப்பகுதி மக்களுக்கென்று தனி சமாதான பூமியாக தனி மயானம் இருக்கின்றது.


## நினைவில் நிற்கும் சில சம்பவங்கள்

2003 இல் ஒரு மாபெரும் வெசக் அன்னதான வைபத்தை டெனவர் பதி வாழ் மக்கள் மிகச் சிறப்பாகக் செய்தனர். 1999 இல் மாபெரும் சிவராத்திரி கலைவிழா நடை பெற்றது.

## மண்டலாபிஷேக பூசை உபயகாரர்கள்

1 சன்முக சுந்தரம் சுவாமி ஜி
2 சேகர் குடும்பம்
3 நடராஜா குடும்பம்
4 விஜயகுமார் குடும்பம்
5 தயானந்த குடும்பம்
6 தம்பிராஜா குடும்பம்
7 ராஜ்குமார் குடும்பம்
8 ராமராவ் குழு
9 இந்திரகுமார் ராஜ்குமார்
10 சசிகலா குழுவினர்
11 ராஜ்குமார் (ஜம்போ)
12 ஆனந்தன்
13 குமுதினி
14 இராமநாதன் குடும்பம்
15 கணேசதாஸன் குழுவினர்.

## ஆலயத்தின் பாதை ஒழுங்கும் அமைவிடமும்



# ஆலய நிருவாகக் கட்டமைப்புகள்

1936 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி பல ஆண்டு காலம் உயர்திரு சுப்ரமணியம் அவர்களின் தலைமையில் ஆலயம் இயங்கிவந்ததுள்ளது. பின் நிருவாகக் கட்டமைப்பின்றி தனியார்களின் தனி முயற்சியால் ஆலய வளர்ச்சி கண்டது.

தலைவர்: சுப்ரமணியம்
உதவியாளர்: மாரிமுத்து, பழனியாண்டி, பொண்ணுச்சாமி ஆகியோர்.

உயர்திரு சின்னத்தம்பி அவர்களும், பழனியாண்டியவர்களும் தொடர்ச்சியாக ஆலயத்தைப் பராமரித்து வந்திருக்கிறார்கள. அத்தோடு அவர்களே பூசைக் கைங்கரியத்தையும் செய்து வந்திருக்கிறார்கள்.

1980ஆம் ஆண்டுக்குப் பின் கிராம முக்கியஸ்தர்களின் வழிகாட்டலில் இவ்வாலயம் வழி நடத்தப்பட்டது.

1997ஆம் ஆண்டு பெரமன் முத்துக்குமார் அவர்களின் தலைமையில் சுப்பிரமணியம், செல்வராஜா, சுந்தர குமார், மகேஸ்வரன், மகாதேவன், நாஜேந்திரன், மருதே ஆகியோர் நிருவாக அமைப்பிலிருந்து வழி நடத்தினர்.

1998 இல் சின்னையா சுப்பிரமணியம் அவர்கள் தலைமையேற்ற வழி நடத்தப்பட்டது.

2002 இல் ஆறுமுகம் மகேஸ்வரன் அவர்களின் தலைமையில் வேலுச்சாமி, இந்திரகுமார், ராமராவ், பாக்கியநாதன், செல்வநாயகம், மருதே ஆகியோர் நிருவாக அமைப்பலிருந்து செயற்பட்டனர்.

2003 இல் தலைவர் மகேஸ் அவர்களின் தலைமையில் இவ்வலாய கட்டட அமைப்புக்காக புதிய நிருவாகம் தோற்று விக்கப்பட்டது. அதில மு.சுந்தர குமார், செல்வராஜ் ஆகியோர் செயல்பட்டனர். இதில் நிருவாகக் குறைபாடுகள் அதிகளவில் இருந்ததன் காரணமாய் தலைவர் ஆ.மகேஸ்வரன் அவர்களும் செயலாளர் மு. சுந்தரகுமார் அவர்களுமே கும்பாபிஷேக காலங்களில் நிருவாக அமைப்பினராகச் செயற்பாட்டார்கள்.

07-03-2005 இல் மீண்டும் ஒழுங்கமைந்த நிருவாக அமைப்பொன்று தோற்று விக்கப்பட்டது. தலைவர் ஆ.மகேஸ்வான, செயலாளர் மு.சுந்தர குமார், பொருளாளர் செலவ்ராஜ உபதலைவர் சி. சுப்பிரமணியம் உபசெயலாளர் இரா. கேதீஸ்வரன், நிருவாக உறுப்பினர்களாக பெ. சிவகுமார், க. ஜெயசங்கர், பா பிரபாகரன் சி.விஸ்வநாதன், ரா.ஜெயகுமார், கி. மைக்கல், சி. சிவபாலன், சு.மதன், சி. பத்மநாதன், த.மங்களதாஸன், சி.நாகேந்திரகுமார், பெ.ரவி, அ. ராஜ்குமார், வி.சரத்பாபு, கு.அசோக்குமார், தோ.சிவா, கு.அசந்த, கு. விஜயகுமார், ரா.வேலுசாமி, ஆர்.எம்.ஆரியரத்ன, பெ. கமல், ரா.புண்ணிய ராஜா, க.உமாமகேஸ்வரன் போன்றோரும் தெரிவு செய்யுப்பட்டனர்.

மாவத்தகம டெனவர் இந்து அமைப்புக்கள்

இந்து சங்கம்

| | | |
|---|---|---|
| தலைவர் | :- | மு.சுந்தர குமார் |
| செயலாளர் | :- | இரா. கணேசதாஸன் |
| பொருலாளர் | :- | வி. ராமநாதன் |

இந்து இளைஞர் மன்றம்

| | | |
|---|---|---|
| தலைவர் | :- | ஜீ. கேதீஸ்வரன் |
| செயலளர் | :- | ச. மணிமாரன் |
| பொருலாளர் | :- | அன்னக்கிளி |

ஸ்ரீ சக்தி மாதர் ஆம்மீகப்பணி மன்றம்

| | | |
|---|---|---|
| தலைவர் | : | அன்னக்கிளி |
| செயலாளர் | :- | உஷாநந்தினி |
| பொருலாளர் | :- | பரமேஸ்வரி |

இவர்களுடன் மாவத்தக டெனவர் பதிவாழ் ஆத்மீகப் பற்று மிக்க திருமதி விஜயலக்ஸ்மி தம்பிராஜா, திருமதி சரோஜினி மாணிக்கம் பிள்ளை, திருமதி கமலாதேவி, ராமநாதன், திருமதி வள்ளிமயில் சுந்தர குமார், திருமதி தேவிகா, மகேஸ்வரன், திருமதி ஜெயசஙர், திருமதி புஸ்பராணி ராஜேந்திரன், திருமதி சசிகலா, திருமதி முத்துக்குமார்

ரவக்கிரக ஆலய முன்னோடிகள்.
ஆ. மகேஸ்வரன்,
க.ஜெயசங்கர்
பெ. சிவகுமார்
சு.செல்வராஜ
க.இந்திரகுமார்
ராமராவ்
சுப்பிரமணியம் (சுபா)
மு. சுந்தர குமார்
பி. மருதே

இந்நவக்கிரக ஆலயத்திற்கு பல அன்பர்கள் மனமுவந்து நிதி உதவி செய்தனர். இடையில் ஏற்பட்ட உள்ளார், வெளியார் என்னும் குழப்பத்தாலும், அரசியல் கட்சி வெறியினாலும் சிறு தடைகள் ஏற்பட்டாலும் மன் தளரா அன்பர்களாலும் இவ்வலாயம் சிறப்பாக அமையப்பெற்றுள்ளது.

அம்மாளுக்குப் பூசை செய்தோர் மாணிக்கம் சின்னத்தம்பி கருப்பையா பழனியாண்டி கங்கானி ஆறுமுகம் மகேஸ்வரன், சின்னையா சுப்ரமணியம், சுப்பையா மதன், கருப்பையா ரவிசங்கர், அழகுமழை, மாணிக்கம் சசிநான்(தர்ஷன்)

அம்மனலயத்தின் மாதர் அணியினர்
திருமதி சரேஜினி பிள்ளை, திருமதி த.விஜயலக்ஸ்மி, திருமதி சு.வள்ளிமயில், திருமதி ம.தேவிகா, திருமதி செ.சுசீலா, திருமதி சு.ராஜலக்ஸ்மி, திருமதி ந.சகுந்தலா, திருமதி மு.கலாவதி, திருமதி ம. வண்ணக்கிளி, திருமதி ர.பொன்னா, திருமதி. ஜெ.சசிகலா, திருமதி ரா.ஜெயலக்ஷ்மி, திருமதி ஸ்ரீ.ஸ்ரீதேவி, திருமதி ரா. மேரிரேனா, திருமதி ப.குமாரி, திருமதி ரா. கமலாதேவி, திருமதி ப. விஜயலக்ஷ்மி, திருமதி மா.காந்திமதி, திருமதி செ. ராஜேஸ்வரி, திருமதி அ.சொக்கம்மா, திருமதி க.ராஜேஸ்வரி, திருமதி சி.அழகுராணி, திருமதி செ. கண்ணதாத்தா, திருமதி வே.மல்லிகாமேரி, திருமதி சி.அன்னலட்சுமி, திருமதி பெ.வடிவழகி, திருமதி வே. அஞ்சலா தேவி, திருமதி ரா. வள்ளி, திருமதி கெ.ராகேஸ்வரி, திருமதி செ.விஜி, திருமதி ம.சாந்திராணி

செல்விகள் சு.பரமேஸ்வரி, க. அன்னக்கிளி, பா.உஷாந்தினி, மா.பிரியதர்ஷனி, வ.கவிதா, சி. புவனேஸ்வரி, மா.பிரிதர்ஷனி, வ.கவிதா, சி. புவனேஸ்வரி, மா.அரியர்ஷனி, ரா.தர்ஷிகா, கு.நிரோசா, அ.பௌர்னமி நதிஷயாமா, க. வாசனாகுமாரி, க.ஷிரோமி, க. சந்திரமதி, ரா. நிர்மலா, ஆ. மஞ்சுளா

## மாவத்தகம பிரதேசத்திற்குட்பட்ட இந்து ஆலயங்களின் தரவு

1. மாவத்தகம ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
2. மாவத்தகம டெனவர் சகலபுவனநாயகி ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
3. முவன்கந்தை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
4. பிடியகந்தை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
5. மொரத்தன்னை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
6. நொடிங்ஹில் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
7. ரேந்தகொட ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்

## மாவத்தகம கோட்டத்திற்குள் அடங்கும் தமிழ்ப் பாடசலைகள்

1. *கு/சரஸ்வதி தமிழ் வித்தியாலயம்*

   வகுப்புக்ள் 1-11 வரை
   மாணவர்த் தொகை 145
   அதிபர் திரு எஸ். மகாலிங்கம்
   முழுவதும் தமிழ் மாணவர்கள்

2. *கு/நொடிங்ஹில் தமிழ் வித்தியாலயம்*

   வகுப்புக்ள் 1-9 வரை
   மாணவர்த் தொகை 32
   அதிபர் திரு எஸ். மைக்கல்
   முழுவதும் தமிழ் மாணவர்கள்

3. *கு/மொறத்தன்னை தமிழ் வித்தியாலயம்*

   வகுப்புக்ள் 1-5 வரை
   அதிபர் திரு விஜேசிங்க
   முழுவதும் தமிழ் மாணவர்கள்

